


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா நிகழ்ச்சியில், "வெற்றி நிச்சயம்" திட்டத்தினை தொடங்கி வைத்து, "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் ThirdWave Corporation நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்ற மு.கார்த்தி என்ற மாணவருக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ் குமார், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன் மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம் திட்ட தொடக்க விழாவில், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள், கண்டறிதல்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உருவாக்கங்களைப் பிரதிபலிக்கும் "நான் முதல்வன் நிரல் திருவிழா கண்காட்சியினை பார்வையிட்டார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று (1.7.2025) நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம்" திட்ட தொடக்க விழாவில், "நான் முதல்வன்" கல்லூரி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா நிகழ்ச்சியில், "வெற்றி நிச்சயம்" திட்டத்தினை தொடங்கி வைத்து, "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் TEXAS INSTRUMENTS நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்ற வினீத் என்ற மாணவருக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பாளையங்கோட்டை, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி (BLA2)பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வகாப் எம்.எல்.ஏ. நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன்,முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மாநகர பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், தினேஷ்,தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயக்குமார்,முத்துச்செல்வி, மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ்,தீர்மானகுழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிப்பாண்டியன், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், துணைச் செயலாளர்கள் தர்மன், சுரேஷ், கிரிஜா குமார், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலாசத்யானந்த்,முன்னாள் மேயர் சரவணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



வாக்குச் சாவடி முகவர்கள் மாற்றுக் கட்சியினரின் சூழ்ச்சிக்கு இடம் அளிக்காமல் தேர்தல் பணியாற்ற வேண்டும் என்றதோடு தமிழக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் முதல்வர் மற்றும் துணை முதல்வரின் சாதனை திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் தினசரி தவறாமல் எடுத்துரைக்க வேண்டும் என்று வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அருகில் ஆத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் மணி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### முன்னாள் குடியரசு துணைத் தலைவர்

# எம்.வெங்கைய நாயுடு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை, 2 - முன்னாள் குடியரசு துணைத் தலைவர் எம். வெங்கைய நாயுடு அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதல்வர்



மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது சமூக வலை தளப் பதிவில், நீங்கள் நல்ல உடல் நலத்துடனும், மகிழ்ச்சியாகவும் தொடர் செல்வாக்குடனும் திகழ வாழ்த்துகிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

---

### கரூர் மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' எனும்

# கழக உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு - மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி அறிக்கை!

கரூர், ஜூலை 2-

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு எனும் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு பிரச்சார பொதுக்கூட்டம் 2ம் தேதி (இன்று) புதன்கிழமை மாலை 6 மணி அளவில் கரூர் உழவர் சந்தை அருகில் நடைபெறுகிறது. தலைமைக் கழக பேச்சாளர் ஆரூர் மணிவண்ணன் சிறப்புரையாற்றுகிறார்.



அது சமயம் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு வி. செந்தில் பாலாஜி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மண், மானம், மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு"மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் வேண்டுகோள்!

கன்னியாகுமரி, ஜூலை 2 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மண், மானம், மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு"மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (02.07.2025 புதன்கிழமை) மாலை 5.00



மணிக்கு நாகர்கோவில், செம்மாங்குடி சாலையில் வைத்து எனது ( மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ்) தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆகவே, இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA), பாக குழு உறுப்பினர்கள் (BLC), கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர் ரெ. மகேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.